**பிப்ரவரி – 15**

# TNPSC துளிகள்


- தெற்கு இரயில்வே நிர்வாகத்தின் சென்னைக் கோட்டத்திற்கான குளிர் சாதன வசதிகள் கொண்ட இரயில் பெட்டிகளை ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற் சாலை (ICF) அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஒருங்கிணைப்பு மற்றும் தயார்நிலையை மேம்படுத்துவதற்காக வேண்டி வான்வழி நடவடிக்கைகளில் நன்கு கவனம் செலுத்தும் விதமாக, இந்திய இராணுவமும் இந்திய விமானப் படையும் இணைந்து கிழக்குப் படைத் தளத்தில் 'விங்கட் ரைடர்' பயிற்சியை வெற்றிகரமாக மேற்கொண்டன.
- "ஸ்ரஜனம்" என்று பெயரிடப்பட்ட இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட தானியங்கி உயிரி மருத்துவக் கழிவுச் சுத்திகரிப்பு நிலையம் ஆனது புது டெல்லியில் உள்ள AIIMS மருத்துவமனையில் திறக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவுடனான ஒத்துழைப்பைப் பெருக்குவதற்காக ஐக்கியப் பேரரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்குள் "Defence Partnership–India" அல்லது DP-I எனப்படும் ஒரு பிரத்தியேக பிரிவானது அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்துவதாக ஐக்கியப் பேரரசு அறிவித்து உள்ளது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் இஸ்ரோ ஆகியவை இணைந்து உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட விண்வெளிப் பயன்பாடுத் தரத்திலான SHAKTI அமைப்பு அடிப்படையிலான குறைகடத்தி சில்லினை உருவாக்கி உள்ளன.
- இந்தியாவைச் சேர்ந்த பங்கஜ் அத்வானி, மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் யஷ்வந்த் கிளப் போட்டிகளில் 36வது தேசியப் பட்டத்தையும் 10வது ஆடவர் ஸ்னூக்கர் பட்டத்தினையும் வென்றுள்ளார்.
- துபாயில் சமீபத்தில் நடைபெற்ற உலக அரசு உச்சி மாநாட்டின் (WGS) போது, 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய சிறந்த M-Gov விருது விழாவில் புது டெல்லியைச் சேர்ந்த மூன்று இந்தியக் கணினி அறிவியல் மாணவர்கள் அதன் வெண்கலப் பதக்கத்தினை வென்றனர்.
- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் (MoHUA) ஆனது, உணவு, பாரம்பரியக் கலைகள் மற்றும் புகைப்படக் கலை மூலம் இந்தியாவின் கலாச்சாரச் செழுமையை எடுத்துக்காட்டும் வகையில், 'Culinary, Crafts & Clicks – Moods & Magic - சமையல், கைவினைப் பொருட்கள் மற்றும் புகைப்படத் துணுக்குகள் – மன நிலைகள் & மாயம்' என்ற தலைப்பிலான விழாவினை அறிமுகப்படுத்தியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்


## தமிழ்நாட்டின் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் புதுப்பிப்பு

- பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் (BC) பட்டியலில் அகமுடையார் பிரிவிலிருந்து துளுவ வேளாளர் சமூகத்தினை நீக்குவதற்கு மாநில அரசு அனுமதித்துள்ளது.
- இதன் மூலம் கள்ளர்கள் மற்றும் மறவர்கள் ஆகிய சமூகப் பிரிவுகளை உள்ளடக்கிய 'முக்குலத்தோர்' எனப்படும் மூன்று பிரிவுகளில் ஒரு பிரிவான அகமுடையார் என்ற பிரிவுடனான இந்தச் சமூகத்தின் 80 ஆண்டுகால "தொடர்பு" முடிவுக்கு வருகிறது.
- மூத்த அரசு ஊழியர் A.N.சட்டநாதன் தலைமையிலான முதல் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் ஆணையம் ஆனது, 1969-70 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அமைக்கப் பட்டது.

- இந்த ஆணையம் ஆனது, "கள்ளர் பிரிவினரைப் போலவே, அகமுடையார் பிரிவும் தென் மாவட்டங்களிலிருந்து குடிபெயர்ந்தனர், ஆனால் அவர்களுக்கும் சென்னையின் அகமுடையான் முதலியார்களுக்கும் துளுவ வேளாளர்களுக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை" என்ற பிரதிநிதித்துவ வாதங்களைக் கொண்டு, 'அகமுடையார்' என்ற அந்தச் சொல்லினைப் பயன்படுத்தியது.
- J.A.அம்பாசங்கர் தலைமையிலான இரண்டாவது BC குழு (1982-85) அமைக்கப்பட்டது.
- இரண்டாவது ஆணையம் ஆனது ஒரு சாதி வாரிக் கணக்கெடுப்பை நடத்தி, அந்தப் பிரிவினர் தங்களை அடையாளம் கண்டுள்ள விதத்தின்படி, துளுவ வேளாளர்களின் தனிக் கணக்கீடு சாத்தியமில்லை என்று கூறியது.




## மதக் கலப்புத் திருமணங்கள் மற்றும் 1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம்




- சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு ஆனது, "இந்து மதத்தைச் சேர்ந்த ஒருவர் வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்ய விரும்பினால், அவர் அத்தகைய திருமணத்தினை 1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும்" என்று கூறியுள்ளது.
- இது அந்தத் திருமணம் சட்ட விரோதமானது மற்றும் செல்லாது என்று அறிவிக்கப் படுவதைத் தவிர்க்கும்.

- இந்துக்களுக்கான தனிநபர் சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் ஆனது, அத்திருமணத்தின் போது இரு தரப்பினரும் இந்துக்களாக இருக்க வேண்டும் என்றும், இந்துப் பழக்கவழக்கங்கள் மற்றும் சடங்குகளின்படி திருமணச் சடங்குகளைச் செய்ய வேண்டும் என்றும் சுட்டுகின்றன.
- ஒரு தரப்பினர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் இல்லையென்றால், சிறப்பு திருமணச் சட்டத்தின் கீழ் திருமணத்தைப் பதிவு செய்வதே சரியான நடைமுறையாகும்.

## கூடுதல் மாநில நிபுணர் மதிப்பீட்டுக் குழு



- தமிழ்நாடு அரசு ஆனது, கூடுதல் மாநில நிபுணர் மதிப்பீட்டுக் குழுவை (SEAC) அமைக்க திட்டமிட்டுள்ளது.
- இந்த நடவடிக்கையானது மாநிலத்தில் அதிகரித்து வரும் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு விரைவான அனுமதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாநிலச் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) மற்றும் மாநில நிபுணர் மதிப்பீட்டுக் குழுவின் (SEAC) பதவிக் காலம் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முடிவடைய உள்ளது.
- இந்தக் குழுக்களை மறுசீரமைப்பதற்கான தனது திட்டத்திற்கு வேண்டிய அனுமதியை விரைவுபடுத்துமாறு தமிழக அரசு கோரியுள்ளது.
- தூத்துக்குடி மாவட்டத்தில் கடலோர மற்றும் வன சுற்றுச்சூழல் அமைப்புகளை நன்கு மேம்படுத்துவதற்காக ஒரு பசுமைக் கவச அமைப்பினை உருவாக்குவதற்கான ஒரு திட்டத்தை அனுமதிக்குமாறு மாநில அரசு கோரியுள்ளது.
- இயற்கை சார்ந்தத் தீர்வுகள் மூலம் மாவட்டத்தில் பல கடலோரப் பகுதிகளில் கடல் அரிப்பை குறைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

# தேசியச் செய்திகள்

## புதிய வருமான வரி மசோதா 2025

- 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தில் உள்ள பொருள் விளங்காத சொற்களைக் குறைத்து அவற்றை நன்கு புரிந்து கொள்வதை எளிதாக்கும் வகையில் நிதியமைச்சர் புதிய வருமான வரி மசோதாவினைத் தாக்கல் செய்துள்ளார்.
- தற்போதைய சட்டம் ஆனது சுமார் 800க்கும் மேற்பட்ட பிரிவுகளைக் கொண்டிருந்தது.

ஆனால முன்மொழியப்பட்ட சட்டம் 536 பிரிவுகளை மட்டுமே கொண்டுள்ளது.

- புதிய வரி முறை ஆனது மக்கள் பின்பற்றவும் செயல்படுத்தவும் மிகவும் எளிதான வகையிலான 'S.I.M.P.L.E' என சுருக்கி கூறப்படும் ஐந்து முக்கியக் கொள்கைகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- இந்த ஐந்து கொள்கைகளும் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன: "நெறிப்படுத்தப்பட்ட கட்டமைப்பு மற்றும் மொழி, ஒருங்கிணைந்த மற்றும் சுருக்கமான, குறைக்கப்பட்ட வழக்காடல் முறை, நடைமுறை சார்ந்தது மற்றும் வெளிப்படையானது, கற்றல் மற்றும் மாற்றியமைத்தல், மற்றும் செயல் திறம் மிக்க வரி சீர்திருத்தங்கள்".
- இதற்கு முந்தைய வருமான வரிச் சட்டத்தில் உள்ள 47 அத்தியாயங்களில் பாதிக்கும் குறைவான 23 அத்தியாயங்களே இந்த மசோதாவில் உள்ளன.
- சட்டத்தில் உள்ளதை விட இரண்டு அதிகமாக இதில் 16 அட்டவணைகள் உள்ளன.
- இந்த மசோதா ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் தொடங்கி 12 மாத காலமாக வரையறுக்கப் பட்டுள்ள "வரி ஆண்டு" என்ற கருத்தை அறிமுகப்படுத்துகிறது.
- இணைய சங்கேதப் பணம் போன்ற மெய்நிகர் எண்ணிமச் சொத்துக்கள் இனிமேல் மதிப்பீட்டாளரின் மூலதன சொத்தாகக் கணக்கிடப்படும் சொத்தின் வரையறையில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இந்த மசோதாவானது பாராளுமன்றத்தின் கூட்டு குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற நிலையில் அக்குழுவானது புதிய வரி திட்டங்களை ஆராய்ந்து தேவைப்பட்டால் அதில் மாற்றங்களைச் செய்யும்.
- இந்தப் புதிய சட்டம் ஆனது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும்.

**INSIDE BILL INTRODUCED IN PARLIAMENT**

| Particulars | Income-tax Act, 1961 | Bill tabled in LS |
|---|---|---|
| Chapters | 47 | 23 |
| Sections | 819* | 536 |
| Words | 5.12 lakh | 2.60 lakh |

*Effective sections. About 1200 provisos and 900 sections have been removed in the new Bill.

**SCHEDULE II (16 ROWS)** Incomes exempt, such as agricultural income

**SCHEDULE III (39 ROWS)** Certain persons eligible for exemption on certain income such as partners of firms and HUF, etc.

**SCHEDULE IV (14 ROWS)** Exemptions to non-residents

**SCHEDULE V (8 ROWS)** Exemption to business trusts, Sovereign Wealth Funds, etc.

**SCHEDULE VI (12 ROWS)** Exemptions to IFSC units

**SCHEDULE VII (48 ROWS)** Persons exempt from tax

## திருத்தப்பட்ட MIS வழிகாட்டுதல்கள்

- சந்தைக் குறுக்கீட்டுத் திட்டத்திற்கான (MIS) பல்வேறு வழிகாட்டுதல்களை வேளாண் அமைச்சகம் திருத்தியமைத்துள்ளது.
- இது பயிர்களின் கொள்முதல் வரம்பினை சுமார் 20 சதவீதத்திலிருந்து 25% அளவாக உயர்த்துகிறது.
- தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற பல்வேறு விரைவில் அழுகக்கூடிய

வேளாண்/தோட்டக்கலைப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு இந்த MIS திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

- ❖ இந்தப் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) பொருந்தாது.
- ❖ முந்தைய வழக்கமான ஆண்டை விட தற்போதைய சந்தை விலையில் குறைந்தபட்சம் 10% குறைப்பு இருக்கும்போது மட்டுமே MIS செயல்படுத்தப்படும்.




## SHREYAS திட்ட உதவித் தொகைகள்

- ❖ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஆனது பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC), இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு (திவ்யாங்ஜன்) உதவித் தொகை வழங்குகிறது.
- ❖ பட்டியலிடப்பட்ட சாதியினருக்கான (SC) மிக இளம் சாதனையாளர்களின் உயர்கல்வி படிப்பிற்கான உதவித்தொகை (SHREYAS) திட்டம் என்பது ஒரு மத்திய அரசின் திட்டம் ஆகும்.
- ❖ இது சமூக நீதி விவகாரங்கள் மற்றும் அதிகாரமளித்தல் துறையால் செயல்படுத்தப் படுகிறது என்பதோடு மேலும் இது 04 துணைத் திட்டங்களை உள்ளடக்கியது.
- ❖ இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மற்றவர்களுக்கான SHREYAS திட்டமானது இரண்டு துணைத் திட்டங்களை உள்ளடக்கியது.
- ❖ இந்த இரண்டில், OBC பிரிவினருக்கான தேசியப் புத்தாய்வு மாணவர் திட்டம் மட்டுமே ஓர் உதவித் தொகைத் திட்டமாகும்.
- ❖ மாற்றுத்திறனாளிகள் துறையானது, இளம் சாதனையாளர்களின் உயர் கல்விக்கான உதவித் தொகை (SHREYAS) என்ற பெயரிலான எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத் தவில்லை.
- ❖ இருப்பினும், இந்தத் துறையானது, ஆறு துணைத் திட்டங்களை உள்ளடக்கிய 'மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான உதவித்தொகை (திவ்யாங்ஜன்)' என்ற ஒரு முதன்மைத் திட்டத்தை செயல்படுத்துகிறது.
- ❖ மேலே குறிப்பிடப்பட்ட அனைத்துத் திட்டங்களும் மத்திய அரசின் திட்டங்கள் ஆகும், எனவே, மாநிலங்கள்/மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

- இந்தத் திட்டங்கள் ஆனது இந்தியா முழுவதும் செயல்படுத்தப்படுகின்றன என்பதால், எந்த மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களும் இந்தத் திட்டங்களின் கீழ் பயனடையலாம்.

**SHREYAS for SC**

| Financial Year | Expenditure (in Crore) | Male beneficiaries | Female beneficiaries | Total beneficiaries |
|---|---|---|---|---|
| 2019-20 | 272.3 | 3938 | 2450 | 6388 |
| 2020-21 | 218.89 | 4778 | 2372 | 7150 |
| 2021-22 | 261.64 | 5720 | 2628 | 8348 |
| 2022-23 | 306.33 | 5320 | 2557 | 7877 |
| 2023-24 | 372.22 | 5470 | 2779 | 8249 |

## புதிய 15 அம்ச திட்டம் 2025




- சிறுபான்மையினரின் நலனுக்கான பிரதமரின் புதிய 15 அம்ச திட்டங்கள் சமீபத்தில் வெளியிடப்பட்டன.
- இந்தத் திட்டம் ஆனது, மத்திய அரசு அறிவித்த ஆறு சிறுபான்மைச் சமூகங்களின் நலிவடைந்த மற்றும் பலவீனமான பிரிவினர் பல்வேறு திட்டங்களைப் பெறுவதற்கான சம வாய்ப்புகளைப் பெறுவதை உறுதி செய்யும் நோக்கில், இத்திட்டத்தில் பங்கேற்கும் அமைச்சகங்கள்/துறைகளின் பல்வேறு திட்டங்கள்/முயற்சிகளை உள்ளடக்கியது.
- இந்த திட்டம் பின்வரும் பரந்த நோக்கங்களைக் கொண்டுள்ளது:
    - கல்விக்கான வாய்ப்புகளை மேம்படுத்துதல்;
    - தற்போதுள்ள மற்றும் புதியத் திட்டங்கள் மூலம் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வேலைவாய்ப்பில் சிறுபான்மையினருக்குச் சமமான பங்கை உறுதி செய்தல், சுயதொழிலுக்கான மேம்படுத்தப் பட்ட கடன் ஆதரவு மற்றும் மாநில மற்றும் மத்திய அரசு வேலைகளில் ஆட்சேர்ப்பு;
    - உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களில் சிறுபான்மையினருக்கு மிகவும் ஒரு

பொருத்தமானப் பங்கை உறுதி செய்வதன் மூலம் அவர்களின் வாழ்க்கை சூழலை மேம்படுத்துதல்; மற்றும்

- சமூக ஒற்றுமையின்மை மற்றும் வன்முறையைத் தடுத்தல் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்துதல்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## இந்தியப் பசுமைப் புரட்சியின் சிற்பி C. சுப்பிரமணியம்

- செங்கல்பட்டின் செய்யூர் தாலுக்காவில் உள்ள இல்லேடு கிராமத்தில் உள்ள தேசிய வேளாண் அறக்கட்டளையின் (NAF) கிராமப்புற மேம்பாட்டு மைய வளாகத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் C. சுப்பிரமணியம் அவர்களின் சிலை திறக்கப்பட்டு உள்ளது.
- NAF அறக்கட்டளையானது C. சுப்பிரமணியம் அவர்களால் நிறுவப்பட்டது.
- அவர் மத்திய வேளாண் அமைச்சராக பதவியேற்ற போது, 1965-66 ஆம் ஆண்டில் பல வட மாநிலங்களில் பெரும் வறட்சி ஏற்பட்டது.
- அந்த நேரத்தில் தான் நார்மன் போர்லாக் அவர்கள், மெக்சிகோ நாட்டுக் கலப்பின ரக கோதுமையை உருவாக்கினார் என்பதோடு M.S.சுவாமிநாதன் மணிலாவிலிருந்து IR8 மற்றும் சோனாலிகா ரக விதைகளை வாங்கி அதில் அறிமுகப்படுத்தினார்.
- C. சுப்பிரமணியம் அவர்கள் துணிந்து செயல்பட்டு, கலப்பின அரிசி மற்றும் கோதுமை விதைகளை வாங்கி நாடு முழுவதும் விநியோகித்தார்.
- இதனால், 1971 ஆம் ஆண்டில், இந்தியா உணவு தானியங்களில் தன்னிறைவு பெற்றது.




# முக்கிய தினங்கள்

## சர்வதேச டார்வின் தினம் - பிப்ரவரி 12


- இந்தத் தினமானது, பரவலாக அறியப்பட்ட இயற்கை ஆர்வலர் சார்லஸ் டார்வின் அவர்களின் பிறந்தநாளில் அவரை கௌரவிக்கும் விதமாக அனுசரிக்கப்படுகிறது.
- டார்வின் இயற்கைத் தேர்வின் மூலமான பரிணாமம் குறித்த தனது கருத்தினை, "The Origin of Species by Means of Natural Selection - இயற்கை தேர்வின் மூலம் உயிரினங்களின் தோற்றம்" என்ற புத்தகத்தில் வெளியிட்டார்.
- அதைத் தொடர்ந்து 1858 மற்றும் 1859 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் அவர் எழுதிய

பிற கட்டுரைகளின் தொடர் வெளிவந்தது.

- அவர் பரிணாமக் கோட்பாட்டின் தந்தை என்றும் அழைக்கப்படுகிறார்.




## உலக வானொலி தினம் - பிப்ரவரி 13




- இது பல்வேறு சமூகங்களில் தகவல், கல்வி மற்றும் பொழுதுபோக்கை மிகவும் நன்கு மேம்படுத்துவதில் வானொலியின் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கும் நாள் ஆகும்.
- தகவல்களைப் பரப்புவதில் வானொலியின் தாக்கத்தினை மிக அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கும் விதமாக அப்போது யுனெஸ்கோ அமைப்பானது 2011 ஆம் ஆண்டில் உலக வானொலி தினத்தினை அறிவித்தது.
- 1946 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை வானொலி நிறுவப்பட்ட ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த தேதியானது தேர்ந்தெடுக்கப்பட்டது.

## தேசிய மகளிர் தினம் - பிப்ரவரி 13

- இந்தத் தினமானது சுதந்திரப் போராட்ட வீரர், சிறுமுது அறிஞர் மற்றும் கவிஞரான சரோஜினி நாயுடு அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- இந்தியாவின் நைட்டிங்கேல் என்றும் அழைக்கப்படும் சரோஜினி நாயுடு அவர்கள் 1879 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 ஆம் தேதியன்று பிறந்தார்.
- 1925 ஆம் ஆண்டு இந்தியத் தேசிய காங்கிரஸின் தலைவராகப் பொறுப்பேற்ற முதல் பெண்மணி ஆவார்.

- பின்னர், 1947 முதல் 1949 ஆம் ஆண்டு வரையில் ஐக்கிய மாகாணங்களின் முதல் பெண் ஆளுநராகவும் பணியாற்றினார்.
- 1929 ஆம் ஆண்டில், அவர் தென்னாப்பிரிக்க நாட்டில் கிழக்கு ஆப்பிரிக்க இந்திய காங்கிரஸுக்கு தலைமை தாங்கினார்.
- இந்தியாவில் பிளேக் தொற்றுநோயின் போது அவர் செய்த அரும்பெரும் பணிக்காக ஆங்கிலேயர்களால் அவருக்கு கைசர்-இ-ஹிந்த் பதக்கம் வழங்கப்பட்டது.
- அவரது முதல் கவிதைத் தொகுப்பான தி கோல்டன் த்ரெஷோல்ட் ஆனது 1905 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★